ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



திருவள்ளுவர் ஆண்டு-2057 மாசி-13 பொ.ஆ.2026- பெப்பிரவரி--25

உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் வெளியிடும் இலவச இணையத் திங்களிதழ்

செவ்வணக்கம்



பிறப்பு	டிச. 26, 1925
பிறப்பின் சிறப்பு	கம்யூனிஸ்ட் இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு பிறந்தவர்
வாழ்வு	சுதந்திர போராட்டம் ; சுதந்திரத்திற்கு பின்னும் மக்களுக்காக போராட்டம்
வகித்த பதவிகள்	இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர்; தேசிய கட்டுப்பாடுக் குழு தலைவர்
சொத்து	இறுதி வரை வாடகை வீடு
விருதுகள்	தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் (விருதோடு அரசு கொடுத்த ரூ. 10 லட்சத்தோடு 5,000 சேர்த்து முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு கொடுத்தார்)

மாண்புமிகு முதலமைச்சரின் புகழ்வணக்கம்

முத்தமிழறிஞர் கலைஞருடன் என்றென்றும் இனிய நட்பைப் பூண்டிருந்தவர். பொடா, எஸ்மா, டெஸ்மா போன்ற அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான போராட்டக் களங்களில், தலைவர் கலைஞருடன் தோளோடு தோள் நின்று களமாடியவர். பொதுவுடைமைக் கருத்தியலும், திராவிட இயக்கக் கருத்தியலும் சமூக மாற்றத்துக்கான இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்பட வேண்டிய கோட்பாட்டுத் தோழமைகள் என்பதில் எப்போதுமே உறுதியாக இருந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் தமது ஆட்சிக் காலத்தில் தோழர் திரு. நல்லகண்ணு அவர்களுக்கு அம்பேத்கர் விருதை வழங்கிச் சிறப்பித்தார். நமது திராவிட மாடல் அரசின் சார்பில் தோழர் அவர்களுக்குத் தகைசால் தமிழர் விருதை வழங்கும் வாய்ப்பைப் பெற்றது எனது பெரும் பேறு!எப்போதும் என்மேல் அன்பும் பாசமும் கொண்டவராக இருந்தார். திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு உருவாக்கிய திட்டங்களை மனப்பூர்வமாக வரவேற்றார். அய்யாவை அவரது ஒவ்வொரு பிறந்தநாளிலும் சந்தித்து வாழ்த்து பெறுவதை நான் வழக்கமாக வைத்திருந்தேன்.

தோழர் திரு. நல்லகண்ணு அய்யா அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பது நமக்குப் பெருமை. அவர் பெற்ற விருதுகள், பரிசுகள் எவையானாலும், அவற்றோடு தொகை அனைத்தையும் கட்சிக்காகவும், மக்கள் நலனுக்காக அரசிடம் ஒப்படைத்த அப்பழுக்கற்ற தலைவர் அவர்!

“தான் வேறு, இயக்கம் வேறு என்று பிரித்துப் பார்க்காமல், இயக்கத்திற்காக இயக்கமாகவே வாழ்ந்தவர்” என்று அவரது நூற்றாண்டு விழாவில் நான் குறிப்பிட்டது இன்றும் நினைவலைகளாக வந்து என் நெஞ்சில் மோதுகிறது.

தோழரின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலும், ஆறுதலும்!மறக்க முடியாத அந்த மாமனிதரின் வாழ்வே நமக்காக அவர் விட்டுச் சென்றிருக்கும் மகத்தான செய்தி. அதுவே நமக்கு வழிகாட்டும் ஒளியாகட்டும்! பாட்டாளி மக்களுக்காகவே வாழ்ந்து நிறைந்த பகட்டில்லாத் தோழர் திரு. நல்லகண்ணு அவர்களின் நினைவும், புகழும் என்றென்றும் காலத்தால் அழியாத கல்வெட்டாக மக்கள் மனதில் நிலைத்திருக்கும்! தமிழ்நாட்டின் உயரிய விருது பெற்ற நம் தகைசால் தமிழரை - இனிய தோழரை முழு அரசு மரியாதையுடன் செவ்வணக்கம் செலுத்தி வழியனுப்பி வைப்போம்!

தனிப்பெரும்தலைவராக,
மக்கள்தொண்டராக,
கடைத்தட்டுமக்களின்
கண்ணீரைத் துடைப்பதில்
முனைப்புக் காட்டி
அயராது உழைத்துவந்த
மக்கள்தலைவர்
தோழர்நல்லகண்ணு
அவர்களின் வரலாறு
ஒவ்வொரு மனிதரும்
படிக்கவேண்டிய
பாடப்புத்தகம்எனலாம்.
தமிழ்நாட்டின்
முப்பத்துமூன்று ஆறுகளிலும்
மூழ்கிக்குளித்த
ஒரே தமிழர் நம் தோழர்
நல்லகண்ணு அவர்களே.
எனவே நீர்மேலாண்மை குறித்து
அவர் காட்டிய தீவிரம்
பொருத்தமானதே எனலாம்.
நதிகளை இணைப்பதில்
அவர் வகுத்த திட்டங்கள்
மத்திய,மாநிலஅரசுகளுக்கு
முறையான வழிகாட்டியாக
விளங்குகின்றன.
தமது இன்னுயிரையும்
பொருட்படுத்தாமல்
மணற்கொள்ளைகளைத் தடுப்பதில்
அவர் காட்டிய செயல்வன்மையும்
தாமிரவருணியாற்றைக்
காப்பாற்றிய திறமும்
என்றும் போற்றத்தக்கன.
வெள்ளையராட்சியில்
காவல்துறையினரால்
அவர் துன்புற்றமையைக்
காட்டிலும் விடுதலைக்குப்பின்
அவர்பட்ட துன்பங்கள்
மிகுதி.

கைகளைப்
பின்புறம் கட்டி
ஒருநாள் முழுதும்
அவரை அடித்துத்
துவைத்த கொடுமையும்
எரியும் வெண்சுருட்டுக்
கொண்டு
அவர் காதின் பின்புறமும்
மீசையும்
சுட்டெரிக்கப்பட்ட
மனிதநேயமற்ற கொடூரமும்
கேட்கும்போதே நம்மைக்
கதறியழச் செய்கின்றன.
ஆனால் அந்தத் துன்பங்களை
மிகப் பொறுமையுடன்
ஏற்றுக்கொண்ட
நல்லகண்ணு அவர்களின்
உயர்பண்பு
அவருக்கேயுரிய
தனிச்சிறப்பு வாய்ந்த
ஆளுமையாகும்.
தன்பேத்தி சண்முகபாரதி
கடும்நோய்வாய்ப்பட்டு
நலிவுற்ற நேரத்தில் கூடக்
கட்சிப்பணிக்கே முதன்மை
வழங்கிக்
கடைசிநேரத்தில்
பேத்தியுடன் இருக்கமுடியாத
அவரின் துன்பநிலை
நம்மைக்
குமுறியழச்செய்கிறது.
தோழர்நல்லகண்ணு
அவர்களின்
ஒப்பற்ற
பொதுநலவேட்கையும்
தொண்டுள்ளமும்
காவியச்சிறப்பு வாய்ந்த
உயர்பண்புகள்.

“எனக்கு ஒரு கண்ணில்
சரிவரப் பார்வை இல்லை
என்றாலும், அகத்தில்
மற்றொரு கண்
இருக்கிறது. அதுதான்
நல்லகண்ணு” என்று
முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களால் கண்ணாகப்
போற்றப்பட்ட முதுபெரும்
தலைவர் - தோழர் திரு.
நல்லகண்ணு அய்யா
அவர்கள் மறைவுற்றார்
என்ற செய்தி
நம்மையெல்லாம் கடும்
துயரத்திற்கு
ஆளாக்கியுள்ளது.
நம் சமகாலத்தில் வாழ்ந்த
சமரசமற்ற போராளி;
நாட்டின் விடுதலைக்காக,
பாட்டாளி வர்க்கத்தின்
நலனுக்காக தம் இனிய
வாழ்வின் பெரும்பகுதியை
ஈகம் செய்த தியாகப்
பெருஞ்சீலர்!
சிறை, சித்திரவதை,
வலிகள் நிறைந்த
வாழ்க்கை என்று எத்தனை
இடர்கள் வந்தாலும் -
“சுட்டுப் பொசுக்கினாலும் –
தோழர்களைத்
தூக்கினில் ஏற்றினாலும்
விட்டுப்பிரியாது –
செங்கொடி
வீரம் குறையாது”
என்று தோழர் ஜீவா
முழங்கியதைப் போல
கொள்கை உறுதி
குலையாமல் குன்றமென
நிமிர்ந்து நின்ற
பண்புக்குரியவர் தீரமிகு
தோழர் நல்லகண்ணு.
--மாண்புமிகு
முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின்

தகைசால் தமிழர் புகழ்மிகு தலைவர் நல்லகண்ணு அவர்களின் வீர வரலாற்றை இளையதலைமுறைக்கு எடுத்துச் சொல்லுவோம்.

காற்றழும் மலையழும்

- -குறள்நெறிப் பாவலர் துரைவசந்தராசன்

நெடுவான் பரப்பை நிமிர்ந்தே அளந்த
நேர்மையின் தாய்ப் பறவை!
தொடுவா னம்போல் தோள்களில் தொங்கிய
தோழமைச் சேய்ப்பறவை!
விடிவா னத்தின் விளக்கொளி எடுத்து
விசிறிய ஒளிப் பறவை!
கடிவா ளங்கள் இலைதா னெனினும்
கசடிலாச் சீர்ப்பறவை.

விரிகடல் பரப்பென விருந்துகள் அழைத்துமே
விழுந்திடா நீர்ப்பறவை!
நெருப்பின் நாக்கே சுவைத்திட மீசையை
நீட்டிய வன்பறவை!
துருப்பிடிக் காத தூய நெருப்பாய்த்
துலங்கிய மறப்பறவை!
கருப்பு நெருப்பாய்க் கலங்கிடா திருந்த
காலத்தின் புகழ்ப்பறவை!

ஒற்றை வரப்பினில் ஓடிப் பழகிய
உயர்ந்த கால் புரவி!
நெற்றுப் போலவே நிறைந்த அனுபவம்
நெடுவான் வரு இரவி!
பற்றுகள் அற்ற பயணியாய் மனிதரின்
பாசம் மிகு துறவி!
வெற்று அறிக்கையாய் வீரம் தொடாத
வேங்கையார் புகழ் பரவி!

இத்துணைச் சிறப்புகள் இருந்தும் இவரோ
எளிமையின் தோள் தழுவி!
சித்துவிளை யாடிடும் எத்தரின் மத்தியில்
சிக்கிடாச் சீரருவி!
எத்துணைத் துயர்கள் எத்துணை இடர்கள்
எதிர்ப்பதில் கூரருவி!
மொத்தத்தில் ஏழையர் முகங்களை மலர்த்த
முந்திடும் மலையருவி!

இன்றிலை எனும்படி போனதேன் தோழரும்
இமயமே சாயலாமா?
கன்றுகள் மடிதேடிக் காய்ந்தே கிடந்திடக்
காராம்பசு ஒளிய லாமா?
குன்றுகளே விளக்குகளைக் குப்புறத் தள்ளலாமா?
கும்மிருட்டு ஆக்கலாமா?

குறள்நெறிப் பாவலர்கள் துரை.வசந்தராசன், திருமதி.அன்புச்செல்வி சுப்புராசு, அய்யாவிடம் வாழ்த்துப் பெறும் காட்சி

சிங்கப்பூர் ஆறாம் அதிபர் எஸ்.ஆர்.நாதன் நினைவேந்தல் நிகழ்வில் அடியேன்,சிங்கை அன்பர், மன்னை ம. நடராசன் ஆகியோருடன் அய்யா

நின்றபடி கிடத்திவைக்க நீரின்றித் தவிக்கவைக்க
நெடுவானம் இடியலாமா?

காற்றழும் !மலையழும்! காடழும்! நாடழும்!
காலமழ போகலாமா?
நேற்றழும்!இன்றழும்! நாளையும் தானழும்!
நேர்மைநீ சாகலாமா?
தேற்றுவார் இன்றியே தேம்பியழு கின்றோம்!
தோழமைநீ ஏகலாமா?
போற்றவுமை இயற்கைவந்து கூப்பிட்டுப் போகிறது
போவதை யார் தடுக்கலாகும்?
போய்வாநீ புகழ் வணக்கம்!

--கவிக்கோ துரைவசந்தராசன்

25.2.2026 மதியம் 2.30 மணி

கலைச்செல்வன் இல்லத்தில் இளங்குமரனார் பிறந்தநாள் நிகழ்வில்



அமெரிக்காவில் பால்டிமோர் நகரில் 4/7/12 மு.வ.நூற்றாண்டு விழாவில் அய்யாவுடன் கலந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றேன்.

அப்பாவுடன் பிள்ளை கலந்துகொண்டதைப் போன்ற நெகிழ்ச்சி;அங்கே வந்த ஆயிரக்கணக்கான தமிழர்களும் அய்யாவை அப்பா,அப்பா என்றே பாசத்துடன் அழைத்துமகிழ்ந்தனர்.[*பின்னர் விரிவாக எழுதுவேன்.*]



கலைமாமணி பொன்னடியான் அவர்கள் முல்லைச்சரம் இதழின் பொன்விழாவில் எனக்கு விருது வழங்கினார்.அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் அய்யா நல்லகண்ணு முன்னிலையில் வழங்கும் நல்வாய்ப்புப் பெற்றேன்.

அய்யா அவர்கள் முதலில் மருத்துவமனை சென்று நலம்பெற்று மீண்டதும் இல்லம் சென்று காணும் வாய்ப்புப் பெற்றேன்.என் திருக்குறள் ஆங்கில மொழியாக்கமும் குறள் பற்றிய ஆங்கில ஆய்வுநூலும் வழங்கிமகிழ்ந்தேன்.

பதின்கவனகர் கலைச்செழியனின் தந்தை கலைச்செல்வன் அவர்களும் அமெரிக்கா வந்து அய்யாவின் அன்புப்பொழிவில் திளைத்துமகிழ்ந்தார்.

நெடுமடல் எழுத நேரமின்றித் தொலைவரி கொடுப்பதைப்போல் ஒரு சில செய்திகளைப் பகிர்ந்துகொன்டேன்.அய்யா அவர்களின் நினைவுகளை விரைவில் விரிவாக வழங்குவேன்.